# சமூக வலைத்தளப் பாவனை கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

**D.F. Doreen[1*] and R. Vijayatheepan[2]**

[1] *Faculty of Education,University of Colombo, Sri Lanka*

[2] *Dept.of Science & Technology Education, Faculty of Education,University of Colombo, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

21ஆம் நூற்றாண்டில் சமூக வலைத்தளங்கள் கல்வியியல் வாய்ப்புகளை வழங்குவதோடு, கவனச்சிதறல், நேரமுகாமைத்துவக் குறைபாடு, கல்விச் சாதனைக் குறைவு, உடல் மற்றும் உளச்சோர்வு போன்ற சவால்களையும் உருவாக்குகின்றன. இதற்கமைய இந்த ஆய்வு, சமூகவலைத்தளப் பாவனை கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வின் முக்கிய நோக்கம், கொழும்பு தெற்குக் கோட்ட தமிழ்மொழிமூல மாகாணப் பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனை கற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறிவதாகும். இவ்ஆய்வானது விவரண ஆராய்ச்சி வடிவமாகவும் கலப்பு அணுகுமுறையாகவும் கொழும்பு தெற்குக் கோட்ட தமிழ்மொழிமூல மாகாணப் பாடசாலைகள் நான்கும் நோக்கமுறை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன. அங்குள்ள சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள் 200 பேரும் படைமுறை எழுமாற்று மாதிரி நுட்பத்தைப் பயன்படுத்தி ஆய்வுக் குடித்தொகையாகவும், குடித்தொகைப் பருமன் கிறெஜ்சி மோகன் அட்டவணைக்கமைய தெரிவு செய்யப்பட்ட 132 மாணவர்களை ஆய்வு மாதிரியாகவும் கொண்டு வினாக்கொத்து மூலம் முதன்மைத் தரவுகளாகவும் 20 பெற்றோர்களுக்கான நேர்காணல், முதலாம், இரண்டாந் தவணைப் பரீட்சைப் புள்ளி ஆவணங்கள் என்பன துணைத்தரவுகளாகவும் சேகரிக்கப்பட்டன. அத்தரவுகள் SPSS மென்பொருள் மூலம் விபரண புள்ளிவிபரவியல் முறையிலும் கருப்பொருள் பகுப்பாய்வு முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டு சதவீதப் பகுப்பாய்வு, பியர்சனின் இணைவுக் குணகம் வழியாக தரவுகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. ஆய்வின் முக்கிய முடிவுகளாக, 18.2% மாணவர்கள் சமூக வலைத்தளங்களை வாரத்தில் ஆறு நாட்களில் பயன்படுத்துகின்றனர். அவற்றுள் Facebook 15.2%, YouTube 90.2%, TikTok 45.5%, Instagram 49.2% போன்ற தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கற்றல் நேரத்தின் குறைவு, கவனச்சிதறல், மனச்சோர்வு, தூக்கமின்மை, கல்விச் சாதனையில் வீழ்ச்சி போன்ற எதிரான விளைவுகள் கற்றல் செயற்பாட்டில் பின்னடைவை ஏற்படுத்துகின்றன. பியர்சனின் இணைவுக் குணகம் ($r$ = .24) மூலம், சமூக வலைத்தளப் பாவனைக்கும் கல்விச் சாதனைக்குமிடையே மிகக் குறைந்தளவில் நேர்த்தொடர்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும், சில மாணவர்கள் சமூக வலைத்தளங்களை கல்வி நோக்கத்திற்காகப் பயன்படுத்தி, குழுக் கற்றல், தகவல்களைத் தேடல் மற்றும் கல்வி வீடியோக்களைப் பயன்படுத்தும் வழக்கத்தையும் வெளிப்படுத்தினர். சமூகவலைத்தளங்களை சீரான வழிநடத்தலுடனும் கட்டுப்பாட்டுடனும் பயன்படுத்தினால் கல்வி மேம்பாட்டுக்கான கருவியாக மாற்றமுடியும்; இல்லையேல் கல்விச் சாதனையைப் பாதிக்கும். எனவே, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் கல்வி நிர்வாகிகள் சமூக வலைத்தளங்களின் பயனுள்ள கல்விசார் ஒருங்கிணைப்பை ஊக்குவிக்க வேண்டும் என்பது இவ்வாய்வின் பரிந்துரையாகும்.

**முதன்மைப் பதங்கள்**: சமூக வலைத்தளங்கள், கற்றல், கற்றல் செயற்பாடு, கொழும்பு நகர்ப்புற மாணவர்கள், சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள்

**franciscadoreendaniel@gmail.com*

## அறிமுகம்

நவீன உலகில், இணைய வசதியுள்ள திறன்பேசிகளின் (Smartphones) பரவலான பயன்பாடு, குறிப்பாக இளைய தலைமுறையினரிடையே, சமூகவலைத்தளங்களுக்கான அணுகலை எளிதாக்கியுள்ளது (Munales et al., 2020). அதிலும், பாடசாலை மாணவர்களிடையே திறன்பேசிகளின் பாவனை அதிகரிப்பதால் சமூக வலைத்தளங்களின் பாவனையும் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது (Keles et al., 2020). இலங்கையைப் பொறுத்தவரையில், சமூகவலைத்தளங்களின் பயன்பாடு பரவலாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக, நகர்ப்புறப் பகுதிகளில் திறன்பேசி மற்றும் இணைய வசதிகளுக்கான அணுகல் எளிதாக இருப்பதால், மாணவர்களிடையே சமூகவலைத்தளப் பாவனையும் அதிகமாகவே காணப்படுகிறது. கொழும்பு தெற்குக் கோட்டம், இலங்கையின் முக்கியமான நகர்ப்புறப் பகுதிகளில் ஒன்றாகும். இங்குள்ள பாடசாலைகள், நவீன வசதிகள் மற்றும் தொழில்நுட்ப அணுகலைக் கொண்டுள்ளன. எனவே, இந்த ஆய்வு, கொழும்பு தெற்குக் கோட்டத்திலுள்ள தமிழ்மொழிமூல மாகாணப் பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு (தரம் 10 மற்றும் 11) மாணவர்களிடையே சமூக வலைத்தளப் பாவனை கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் தாக்கத்தை விரிவாக ஆராய முற்படுகிறது.

கொழும்பு தெற்குக் கோட்டம் நகர்ப்புற பாடசாலைகளைக் கொண்டது. ஆய்வு முடிவுகளின்படி கிராமப்புறங்களை விட நகர்ப்புற மாணவர்கள் சமூகவலைத்தளங்களைப் பாவிப்பதன் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது (Fernando & Jayasuriya, 2022). பாடசாலை மாணவர்களிடையே சமூகவலைத்தளப் பயன்பாடு, அவர்களின் கவனத்தைச் சிதறடித்தல், படிக்கும் நேரத்தைக் குறைத்தல், தூக்கமின்மை, மனஅழுத்தம் மற்றும் கல்வி அடைவுகளில் குறைவு போன்ற பல்வேறு எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் (Mohamed et al., 2022). கொழும்பு தெற்குக் கோட்ட மாணவர்களின் தேர்வுக்கான சித்தியெய்திய வீதம் கடந்த ஐந்து ஆண்டுகளில் 10% குறைந்துள்ளது (Ministry of Education, 2023). ஆகவே, இக்கோட்டத்திலுள்ள சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் கற்றலில் சமூக வலைத்தளங்களின் பாவனை எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதைக் கண்டறிவதற்காக இவ் ஆய்வு ஆய்வாளரால் மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வின் நோக்கமும் குறிக்கோள்களும்

### *ஆய்வு நோக்கம்*

கொழும்பு தெற்குக் கோட்ட தமிழ்மொழிமூல மாகாணப் பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனை கற்றலில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறிதல்.

***ஆய்வுக் குறிக்கோள்கள்***

1. மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனை நேரத்தைக் கண்டறிதல்.
2. மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதன் நோக்கங்களைக் கண்டறிதல்.
3. சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தைக் கண்டறிதல்.
4. பாடசாலை மாணவர்களின் கற்றல் பெறுபேறுக்கும் சமூகவலைத்தளப் பாவனைக்குமிடையிலான தொடர்பினைக் கண்டறிதல்.

**இலக்கிய மீளாய்வு**

***கோட்பாட்டு ரீதியான இலக்கிய மீளாய்வு***

***அறிவாற்றல் சுமை கோட்பாடு (Cognitive Load Theory)***

வேலை நினைவக (working memory) வரம்பு, வெளிப்புறத் தூண்டுதல்கள் கற்றலுக்குத் தடையாக இருக்கின்றன (Sweller, 1988).

***இணைப்புவாதக் கோட்பாடு (Connectivism Theory)***

சமூக ஊடகத் தளங்கள் மாணவர்களுக்குப் பலதரப்பட்ட கண்ணோட்டங்களை வெளிப்படுத்துகின்றன (Siemens, 2005).

***சமூக கற்றல் கோட்பாடு (Social Learning Theory)***

மக்கள் பிறரின் நடத்தையைப் பார்ப்பதன் மூலமும், அதைப் பின்பற்றுவதன் மூலமும் கற்றுக்கொள்கிறார்கள் (Bandura, 1977).

***பயன்பாடுகள் மற்றும் திருப்திக் கோட்பாடு (Uses and Gratifications)***

ஊடகம் ஒரு செயலைச் செய்வதில்லை, மாறாக ஊடகத்தைப் பயன்படுத்துபவர் ஒரு நோக்கத்துடன் அந்த ஊடகத்தைப் பயன்படுத்துகிறார் (Katz et al., 1973).

***அனுபவ இலக்கிய மீளாய்வு***

டயசியா (2017) சமூக வலைத்தளங்களின் பாவனையானது வளர்ந்தவர்களால் மட்டுமன்றி 18 வயதிற்கு குறைந்த பாடசாலை மாணவர்களால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுகிறது. அன்றுவரை தகவல் பரிமாற்றத்திற்காக மட்டுமே என உன்னதமானதாகக் கருதப்பட்ட சமூக வலைத்தளம், எப்போது அதனுடன் பொழுதுபோக்கு, வணிகம், விளையாட்டு, போன்ற கூறுகள் இணைக்கப்பட்டனவோ அப்போதே அது அழிவுக்கான பாதையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிவிட்டது (சுஜா, 2022). பொழுதுபோக்குக்காகவும், தொடர்பு கொள்வதற்காகவும் சமூகவலைத் தளங்களைப் பயன்படுத்துவது கல்விச் செயற்பாடுகளில் எதிரான விளைவுகளை

ஏற்படுத்தலாம் (Sandanayake & Perera, 2023). அதிக நேரம் சமூக வலைத்தளங்களில் செலவழிக்கும் மாணவர்கள் பாடசாலை வேலைகளில் குறைவான ஈடுபாடு காட்டுவதுடன், குறைந்த கல்வி அடைவையும் பெறுகின்றனர் (Rajapakse & Mendis, 2020). Alhassan (2020) சமூக ஊடகத்தின் அதிகளவான பயன்பாடு கல்விக்கான நேர ஒழுங்கின்மைக்கு வழிவகுக்கிறது. Vithanage & Nawarathna (2023) சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவழிக்கும் மாணவர்களுக்கு அதிகளவு கல்விச் சோர்வு ஏற்பட்டு உந்துதல், ஈடுபாடு, ஒட்டுமொத்த கல்விச் செயற்திறன் ஆகியவற்றை எதிராகப் பாதிக்கிறது. சமூக ஊடகப் பழக்கங்கள் மாணவர்களின் உளநலத்தையும் கல்விச் செயற்திறனையும் பாதிக்கிறது (Jiang et al., 2025). சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவழிப்பது ஆரோக்கியத்தையும் கற்றலையும் சீர்குலைக்கிறது (Mahmoudi et al., 2025). Nwosu & Okafor (2021) சமூக ஊடகப் பயன்பாடு மாணவர்களில் தாமதப்படுத்தும் பழக்கத்தை அதிகரிக்கின்றது என்கின்றனர். Lakshman & Weerasinghe (2023) மாணவர்கள் சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவழிப்பது அவர்களின் கல்வி மதிப்பெண்களில் குறிப்பிடத்தக்க சரிவை ஏற்படுத்தக்கூடும் என்கின்றனர். அதாவது, சமூக வலைத்தளத்திற்கு அடிமையான மாணவர்கள் குறைந்த கல்வி ஈடுபாடு மற்றும் மோசமான மதிப்பெண்களைப் பெறுகிறார்கள் (Perera & Wijewardena, 2021). ஆனால், குறைந்த நேரமே சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் மாணவர்கள் சிறந்த கல்வி அடைவுகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது (Gunawardena & Perera, 2019). Khan et al. (2019) பல்கலைக்கழக மாணவர்களிடையே அதிக நேரம் சமூக ஊடகங்களில் ஈடுபட்டவர்கள் குறைந்த GPA பெற்றதாக அறிக்கை செய்தனர். Nweke et al. (2025) நைஜீரிய மாணவர்கள் சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவழிப்பதால் கல்விச் சாதனை குறைகிறது என்றும் Perera & Senanayake (2023) அதிக சமூக வலைத்தளப் பயன்பாடு மாணவர்களின் ஆய்வுப் பழக்கவழக்கங்களை எதிரானதாக்கி, இறுதியில் அவர்களின் கல்விச் சாதனையைப் பாதிக்கிறது என்றும் தெரிவித்தனர். Statista (2023) மாணவர்கள் தினசரி மூன்று முதல் நான்கு மணிநேரம் சமூக வலைத்தளங்களில் செலவிடுவதானது படிப்புக்கு ஒதுக்கப்படும் நேரத்தை பாதிக்கின்றது. அதிக நேரம் சமூக ஊடகங்களில் செலவழிப்பது கல்வி செயற்திறனை எதிரானதாகப் பாதிக்கின்றது (Amin et al., 2016). சாரா (2025) சமூக ஊடகங்களில் தொடர்ந்து திரும்பத் திரும்ப இயங்குவது கவன ஈடுபாட்டைக் குறைத்து, பயனர்கள் குறுகிய கால கவனம் செலுத்துவதானது அவர்களின் திறனையும் உற்பத்தித்திறனையும் பாதிக்கிறது என்கின்றனர். Saqib & Rehman (2018) ஆகியோரின் ஆய்வின்படி சமூக ஊடகங்களில் தினசரி பல மணி நேரம் செலவழிப்பது கல்வி சாதனைகளில் மிகுந்த எதிரான தாக்கம் ஏற்படுத்துகின்றது. மின்னணு சாதனங்களில் நீண்ட நேரம் செலவிடுவது, மாணவர்களின் உடல் நலத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தி, தூக்கமின்மை, கண் சோர்வு மற்றும் உடல் சோர்வு போன்ற சிக்கல்கள், அவர்களின் கல்விசார் செயற்திறனைக் குறைக்கின்றது (Orben et al., 2019). சைபர் கொடுமைப்படுத்துதல், சமூக ஒப்பீடுகள் மற்றும் தவறான தகவல்களை எதிர்கொள்வது போன்ற காரணங்களால் ஏற்படும் மனஅழுத்தம் மாணவர்களின் கவனம்,

நினைவாற்றல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களைக் குறைக்கிறது (Rajapakse & Mendis, 2019). இந்த மன அழுத்தம் அவர்களின் கல்வி அடைவு மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்விலும் குறிப்பிடத்தக்க பின்னடைவுகளை ஏற்படுத்தக்கூடும் (Samarasinghe & Wijeratne, 2025).

### *ஆய்வு இடைவெளி*

இலங்கை சூழலில், குறிப்பாகக் கொழும்பு தெற்குக் கோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களிடையே இந்தத் தாக்கம் எவ்வாறானதாக இருக்கிறது என்பது குறித்த விரிவான, உள்ளூர் சார்ந்த ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. சர்வதேச ஆய்வுகள் பொதுவான போக்குகளைக் காட்டினாலும், உள்ளூர் கல்விச்சூழல், கலாசாரக் காரணிகள், கல்வித் திட்டம் மற்றும் மாணவர்களின் குறிப்பிட்ட சமூக, பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றைப் பொறுத்து அதன் தாக்கம் வேறுபடலாம். இலங்கையின் கல்வி அமைச்சின் (2023) தரவுகளின்படி, கொழும்பு தெற்குக் கோட்ட மாணவர்களின் தேர்வுக்கான சித்தியெய்தல் வீதம் கடந்த ஐந்து ஆண்டுகளில் 10% குறைந்துள்ளது. இந்த வீழ்ச்சிக்கு சமூக வலைத்தளப் பாவனை ஒரு காரணமாக இருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் எழுகிறது. இருப்பினும், இந்த வீழ்ச்சிக்கு சமூக வலைத்தளங்கள் எந்த அளவுக்குப் பங்களிக்கின்றன, அல்லது வேறு காரணிகள் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தத் தெளிவான ஆய்வு முடிவுகள் இல்லை.

## ஆய்வு முறையியல்

### *ஆய்வு வடிவம்*

மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனைக்கும் அவர்களின் கற்றலுக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிந்து விபரிக்க வேண்டியுள்ளதால் இவ்வாய்வானது விவரண அளவீட்டு ஆய்வு வடிவில் மேற்கொள்ளப்பட்டது.

### *ஆய்வு அணுகுமுறை*

வினாக்கொத்தில் மூடிய வினாக்களில் இருந்து எண்சார் தரவுகளும் நேர்காணல் மூலம் பண்புசார் தரவுகளும் ஆவணப் பகுப்பாய்வின் மூலம் எண்சார் தரவுகளும் கிடைக்கப்பெற்றமையினால் இவ் ஆய்வானது கலப்பு முறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டது.

### *ஆய்வுப் பிரதேசம்*

கொழும்பு மாவட்டத்தின், கொழும்பு தெற்குக் கோட்ட தமிழ்மொழிமூல மாகாணப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுவதனால், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட கொழும்பு 3, கொழும்பு 4, கொழும்பு 6 ஆகிய பகுதிகள் ஆய்வுப் பிரதேசமாகக் கொள்ளப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

### *ஆய்வுக் குடித்தொகையும் மாதிரி எடுப்பும்*

கொழும்பு தெற்குக் கோட்ட தமிழ்மொழிமூல மாகாணப் பாடசாலைகளிலுள்ள சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கும் 200 மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் இருந்து படைமுறை எழுமாற்று மாதிரி எடுப்பு நுட்பத்தைப் பயன்படுத்தி கிறெஜ்சி மோகன் அட்டவணைக்கு அமைய தெரிவுசெய்யப்பட்ட 132 மாணவர்கள் ஆய்வு மாதிரியாகக் கொள்ளப்பட்டனர். இவர்களுடைய தரவுகளை உறுதிப்படுத்துவதற்காக 20 மாணவர்களின் பெற்றோர்கள் நோக்குடை மாதிரி எடுப்பு நுட்பத்தின் கீழும் தெரிவு செய்யப்பட்டனர்.

### *தரவு சேகரிப்புக் கருவிகள்*

முதனிலைத் தரவு சேகரிப்புக் கருவிகளாக மாணவர்களுக்கான வினாக்கொத்தும், இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்புக் கருவிகளாக பெற்றோர்களுக்கான நேர்காணல், தவணைப்புள்ளிப்பதிவு ஆவணங்களும் பயன்படுத்தப்பட்டன.

### *தரவு சேகரித்தல்*

ஆய்வுப் பிரச்சினையுடன் தொடர்பான ஆய்வு வினாக்களுக்கான விடைகளைப் பெறுவதற்காக தரவுகள் சேகரிக்கப்பட்டன. இதற்காக முதனிலைத் தரவுகளாக மாணவர்களுக்கான வினாக்கொத்தும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பெற்றோருடனான நேர்காணலும், ஆவணப் பகுப்பாய்வும் ஆகிய தரவு சேகரிப்புக் கருவிகளைப் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### *தரவுப் பகுப்பாய்வு*

ஆய்வு நோக்கத்துக்காக சேகரிக்கப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளைப் பயன்படுத்தி புள்ளிவிபரப் பகுப்பாய்வும் பண்புசார் தரவுகளுக்கு கருப்பொருள் பகுப்பாய்வும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனூடாக தரவுகளை விவரண புள்ளிவிபரவியல் ரீதியாகவும் இடைத்தொடர்பு ரீதியாகவும் அட்டவணைகள், விளக்கப்படங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

***ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் பொதுவான தகவல்கள்***

**அட்டவணை 1**

*ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களின் பொதுவான தகவல்கள்*

| | வயது | | | | தரம் | | | பால் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடசாலை | 14 - 15 | 16 – 17 | 17+ | மொத்தம் | தரம் 10 | தரம் 11 | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| A | 24 | 26 | 01 | 51 | 28 | 23 | 51 | 30 | 21 | 51 |
| B | 16 | 17 | 01 | 34 | 20 | 14 | 34 | 18 | 16 | 34 |
| C | 16 | 17 | - | 33 | 18 | 15 | 33 | 19 | 14 | 33 |
| D | 08 | 06 | - | 14 | 09 | 05 | 14 | 09 | 05 | 14 |
| மொத்தம் | 64 | 66 | 02 | 132 | 75 | 57 | 132 | 76 | 56 | 132 |

அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் வயதுப்பிரிவு விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி 132 மாணவர்களில் 64 மாணவர்கள் 14 - 15 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும், 66 மாணவர்கள் 16 - 17 வயதிற்கு இடைப்பட்டவர்களாகவும், இரண்டு மாணவர்கள் 17 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் உள்ளனர் என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது. அதன்படி, பெரும்பாலான மாணவர்கள் (98.5%) 14 முதல் 17 வயதுக்குள் உள்ளவர்கள் என்பது தெளிவாகிறது. இது, சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் வழக்கமான வயதுக்கட்டமாகும். மிகக் குறைந்த மாணவர்கள் (1.5%) மட்டுமே 17 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆவர். இதனால், மாதிரித்தொகுதி வயது அடிப்படையில் ஒரேவகையானதாக (Homogeneous) அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதுவே, சமூகவலைத்தளப் பாவனையின் அதிகபட்சம் காணப்படும் பருவமாகக் கருதப்படுவதால், இவ்வாய்வுக்கான மாதிரித்தேர்வு (Sample) பொருத்தமானது எனக் கூறலாம்.

அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் தரங்களின் பிரிவு விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது தரம் 10 மற்றும் தரம் 11 மாணவர்களின் பங்கேற்பை ஒப்பீடு செய்கிறது. அதற்கமைய, 132 மாணவர்களில் 75 மாணவர்கள் (56.8%) தரம் 10 இலும், 57 மாணவர்கள் (43.2%) தரம் 11 இலும் காணப்படுகின்றனர். சிரேஷ்ட இடைநிலைப் பிரிவின் தரம் 10, தரம் 11 ஆகிய இரு தரங்களும் கற்றல் அழுத்தமும் பரீட்சைத் தயாரிப்பும் மிகுந்த காலமாக இருப்பதால், சமூக வலைத்தளப் பாவனையின் தாக்கத்தை மதிப்பிட இக்குழு மிகுந்த பொருத்தமானதாகும்.

அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் பால்நிலை விபரங்கள்

முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வில் பங்கேற்ற மாணவர்களில் 76 மாணவர்கள் (57.6%) ஆண்களாகவும், 56 மாணவர்கள் (42.4%) பெண்களாகவும் உள்ளனர். இதனால் ஆய்வின் மாதிரியில் இரு பாலினங்களும் குறிப்பிடத்தக்க அளவில் இடம்பெற்றிருப்பது, சமூக வலைத்தளப் பாவனையில் பாலின அடிப்படையிலான வேறுபாடுகளை ஆராய்வதற்கான சிறந்த அடிப்படையாக அமைகிறது. இலக்கியமீளாய்வுகளின்படி, சமூகவலைத்தளப் பாவனையில் பாலின வேறுபாடு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பல்வேறு முன்னைய ஆய்வுகள், பெண் மாணவர்கள் சமூக வலைத்தளங்களை பெரும்பாலும் சமூக உறவுகள் மற்றும் தொடர்புகளைப் பேணும் நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதாகவும், ஆண் மாணவர்கள் அவற்றைப் பெரும்பாலும் தகவல்களை தேடல், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதாகவும் கூறுகின்றன. எனவே, இவ்வாய்விலும் ஆண், பெண் இரு பகுதியினரை புள்ளிவிவர ரீதியாக ஆராய்வதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

***மாணவர்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளங்கள்***

**அட்டவணை 2**

*மாணவர்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளங்கள்*

| சமூக வலைத்தளங்கள் | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| Facebook | 20 | 15.2% |
| Instagram | 65 | 49.2% |
| TikTok | 60 | 45.5% |
| YouTube | 119 | 90.2% |
| WhatsApp | 122 | 92.4% |
| Twitter (X) | 04 | 03.0% |
| Snapchat | 48 | 36.4% |
| ChatGPT | 05 | 03.8% |
| FREE FIRE | 13 | 09.8% |

*Note*. மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களை தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

அட்டவணை 2 இன்படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 132 மாணவர்களில் மிக அதிகமானோர் WhatsApp (92.4%) மற்றும் YouTube (90.2%) தளங்களைப் பயன்படுத்துவதாகக் காணப்படுகிறது. அடுத்ததாக, Instagram (49.2%) மற்றும் TikTok (45.5%) ஆகிய தளங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. Snapchat (36.4%) தளமும் மாணவர்களிடையே ஒரு பிரபலமான தளமாகக் காணப்படுகிறது. ஆனால், Facebook (15.2%) தளம் பழைய தலைமுறையைப் போல இளைய தலைமுறையினரால் அதிகம் பயன்படுத்தப்படவில்லை என்பது இவ்வாய்வின் முக்கியக் குறிப்பு. சில மாணவர்கள் Free Fire (9.8%) மற்றும் ChatGPT (3.8%) போன்ற பயன்பாடுகளைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது, மாணவர்கள் சமூக வலைத்தளங்களை நிகழ்நிலை விளையாட்டு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த கல்வி கருவிகளையும் தங்களின் கற்றல் மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளில் இணைத்துக்

கொள்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. Twitter (X) (3.0%) பயன்படுத்தும் மாணவர்கள் மிகக் குறைவாக இருக்கின்றது.

***மாணவர்களின் ஒரு நாளைக்கான சமூக வலைத்தளப் பாவனை அளவு***

**அட்டவணை 3**

*மாணவர்களின் ஒரு நாளுக்கான சமூக வலைத்தளப் பாவனை அளவு*

| பாவனை நேரம் (ஒரு நாள்) | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| 1 மணித்தியாலத்திற்குக் குறைவு | 60 | 45.5% |
| 1–2 மணித்தியாலங்கள் | 39 | 29.5% |
| 2–3 மணித்தியாலங்கள் | 14 | 10.6% |
| 3–4 மணித்தியாலங்கள் | 11 | 08.3% |
| 4 மணித்தியாலங்களுக்கு மேல் | 08 | 06.1% |
| மொத்தம் | 132 | 100% |

**அட்டவணை 4**

*மாணவர்களின் வாரமொன்றிற்கான சமூக வலைத்தளப் பாவனை அளவு*

| பாவனை நேரம் (ஒரு வாரம்) | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| 0–1 நாள் | 26 | 19.7% |
| 1–2 நாட்கள் | 42 | 31.8% |
| 3–4 நாட்கள் | 28 | 21.2% |
| 5–6 நாட்கள் | 24 | 18.2% |
| 7 நாட்கள் | 12 | 09.1% |
| மொத்தம் | 132 | 100% |

**அட்டவணை 5**

*பெற்றோரின் கருத்துப்படி மாணவர்களின் வாரமொன்றிற்கான சமூக வலைத்தளப் பாவனை அளவு*

| பாவனை நேரம் (ஒரு வாரம்) | பெற்றோர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| 0–1 நாள் | 03 | 15% |
| 1–2 நாட்கள் | 04 | 20% |
| 3–4 நாட்கள் | 04 | 20% |
| 5–6 நாட்கள் | 03 | 15% |
| 7 நாட்கள் | 06 | 30% |
| மொத்தம் | 20 | 100% |

மேலுள்ள அட்டவணைகளின் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து மாணவர்களும் (100%) சமூக வலைத்தளங்களை தினசரி பாவிக்கிறார்கள் எனக் கூறியுள்ளனர். அதில், பெரும்பாலானோர் (45.5%) தினமும் ஒரு மணித்தியாலத்திற்குக் குறைவாக, மற்றும் 29.5% மாணவர்கள் 1 - 2 மணித்தியாலங்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர். இது, பெரும்பாலான

மாணவர்கள் சமூக வலைத்தளங்களை மிதமான அளவில் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. எனினும், 6.1% மாணவர்கள் தினமும் நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் கூறியிருப்பது, அதிகப் பாவனை அல்லது அடிமைத்தனப் போக்கை சுட்டிக்காட்டக்கூடியது.

வாராந்த அடிப்படையில், 31.8% மாணவர்கள் 1 - 2 நாட்களில் அதிக நேரம் சமூக வலைத்தளங்களில் செலவிடுவதாகக் கூறியுள்ளனர். மேலும், 9.1% மாணவர்கள் ஏழு நாட்களிலும் இத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். இது சமூக வலைத்தளங்கள் மாணவர்களின் தினசரி பழக்கத்தின் அங்கமாக மாறிவிட்டன என்பதைக் காட்டுகிறது. இத்தரவுகளை உறுதி செய்யும் நோக்குடன் பெற்றோரிடம் பெற்றுக்கொண்ட துணைத்தரவுகளின் அடிப்படையில், 30% பெற்றோர் தங்கள் பிள்ளைகள் தினமும் (ஏழு நாட்களும்) சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். இதனால், பெற்றோர்களும் மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனையின் தொடர்ச்சியையும் தாக்கத்தையும் உணர்ந்திருப்பது தெரிகிறது.

***மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனையின் ஆரம்பம்***

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்கள் எந்த வயதில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள் என்பதைக் காட்டுகிறது. இது, மாணவர்கள் சமூக ஊடக உலகில் எந்த வயதில் நுழைகிறார்கள் என்பதையும், அவர்களின் டிஜிட்டல் பழக்கவழக்கங்கள் எப்போது உருவாகத் தொடங்குகின்றன என்பதையும் புரிந்துகொள்ள முக்கியமான தகவலாகும்.

**அட்டவணை 6**

*மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனையின் ஆரம்பம்*

| வயது | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| 10 வயதிற்கு முன் | 03 | 02.3% |
| 10-12 | 15 | 11.4% |
| 13-15 | 102 | 77.2% |
| 16 இற்கு மேல் | 12 | 09.1% |
| மொத்தம் | 132 | 100% |

அட்டவணை 6 இன் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோர் (77.2%) 13 - 15 வயதுக்குள் சமூக வலைத்தளங்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். இது, மாணவர்கள் பெரும்பாலும் கனிஷ்ட இடைநிலை கல்விக் காலத்தில் சமூக வலைத்தளங்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. மேலும், 11.4% மாணவர்கள் 10 - 12 வயதிலேயே இத்தளங்களைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 10 - 12 வயது என்னும் போது, ஆரம்பப் பிரிவை முடித்துக்கொண்டு கனிஷ்ட இடைநிலைக்குள் நுழையும் பருவத்திலே டிஜிட்டல் உலகில் ஈடுபடத் தொடங்கும் ஒரு புதிய தலைமுறை உருவாகி வருவதை உணர்த்துகிறது.

10 வயதிற்கு முன்பே (2.3%) சமூக வலைத்தளங்களைப் பாவித்ததாகக் கூறிய மாணவர்கள் மிகக் குறைவு. இருந்தபோதிலும், இவ்வாறான ஆரம்ப வயதிலேயே சமூக வலைத்தளப் பாவனை தொடங்குவது மனநிலை வளர்ச்சி, கல்விசார் கவனம் மற்றும் சமூகப் பழக்கங்களில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகும். 16 வயதிற்கும் மேற்பட்டோர் (9.1%) சமூக வலைத்தளங்களை தாமதமாகப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர். இது, சில மாணவர்கள் கல்விசார் முன்னுரிமை அல்லது பெற்றோர் வழிகாட்டுதலின் காரணமாக தாமதமாக இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களை அணுகியிருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

**அட்டவணை 7**

*மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் நேரம்*

| நேரம் | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| அதிகாலை நேரங்களில் | 14 | 10.6% |
| போக்குவரத்தின் போது | 13 | 09.8% |
| பாடசாலை நேரம் | 0 | 0.0% |
| பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்த பின் | 68 | 51.5% |
| இரவு நேரங்களில் | 58 | 43.9% |
| விடுமுறை நாட்களில் | 78 | 59.1% |

***பெற்றோரின் கருத்துப்படி மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் நேரம்***

**அட்டவணை 8**

*பெற்றோரின் கருத்துப்படி மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் நேரம்*

| நேரம் | பெற்றோர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| காலை | 10 | 50% |
| மாலை | 12 | 60% |
| இரவு | 20 | 100% |
| கற்கும் வேளைகளில் | 16 | 80% |

இப்பகுதி, மாணவர்கள் எந்த நேரங்களில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை ஆராய்கிறது. மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் நேரம், அவர்களின் கற்றல் பழக்கம், கவனம், மற்றும் நேர மேலாண்மை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றக்கூடியதாகும். அதேபோல், பெற்றோர்களின் பார்வையும் இதில் இணைக்கப்பட்டுள்ளது. இது மாணவர்களின் உண்மையான பாவனை நேரம் குறித்த ஒரு வெளிப்பார்வையை வழங்குகிறது.

அட்டவணை 7 இன் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோர் (59.1%) சமூக வலைத்தளங்களை விடுமுறை நாட்களில் அதிகம் பயன்படுத்துகிறார்கள். இது, மாணவர்கள் விடுமுறை மற்றும் ஓய்வு நேரங்களில் சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவிடுவதைப் புலப்படுத்துகிறது. அடுத்து, பாடசாலை

முடிந்த பின் (51.5%) மற்றும் இரவு நேரங்களில் (43.9%) சமூக வலைத்தளப் பாவனை அதிகம் காணப்படுகிறது. இது, மாணவர்கள் பாடசாலைப் பணிகளை முடித்த பின் தங்கள் தனிநேரத்தை டிஜிட்டல் தொடர்பு மற்றும் பொழுதுபோக்குக்காக செலவிடுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அதிகாலை (10.6%) மற்றும் போக்குவரத்தின் போது (9.8%) சமூக வலைத்தளப் பாவனை குறைவாகவே காணப்படுகிறது. இதிலிருந்து, பெரும்பாலான மாணவர்கள் தங்கள் பாடசாலை நேரங்களில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தாமல், பாடசாலை முடிவடைந்த பினனர் மற்றும் இரவு நேரங்களில் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் குறிக்கிறது.

அட்டவணை 8 இன் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 20 பெற்றோர்களின் கருத்துப்படி, அனைத்து பெற்றோர்களும் (100%) தங்கள் பிள்ளைகள் இரவு நேரங்களில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், 80% பெற்றோர் அவர்கள் கற்கும் வேளைகளிலும் சமூக வலைத்தளங்களில் ஈடுபடுவதாகக் கூறியுள்ளனர். இது, மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனை குறித்து, பெற்றோர்களின் கவலைகளை வெளிப்படுத்துகிறது.

***சமூக வலைத்தளப் பாவனைக்கான இணைய வசதி***

இப்பகுதி, மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கு இணைய வசதியை எங்கிருந்து பெறுகிறார்கள் என்பதை ஆராய்கிறது. இணைய வசதி கிடைக்கும் இடம், மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனையில் நேரடி தாக்கம் ஏற்படுத்தக்கூடிய ஒரு முக்கிய கூறாகும்.

**அட்டவணை 9**

*சமூக வலைத்தளப் பாவனைக்கான இணைய வசதி*

| இடம் | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| வீட்டில் | 118 | 89.4% |
| பாடசாலையில் | 00 | 00.0% |
| பொது இடங்களில் (Netcafe போன்றவை) | 05 | 03.8% |
| நண்பரின் வீட்டில் | 09 | 06.8% |
| மொத்தம் | 132 | 100% |

அட்டவணை 9 இன் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோர் (89.4%) வீட்டிலேயே சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். இது, மாணவர்கள் வீட்டில் தனிப்பட்ட ஸ்மார்ட்போன் அல்லது குடும்ப Wi-Fi வசதியின் மூலம் இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அத்துடன், வீட்டிலேயே இணைய வசதி கிடைப்பது சமூக வலைத்தளப் பாவனையை எளிதாக்கும் முக்கிய காரணமாகவும் விளங்குகிறது. இது, பெற்றோர் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது. 6.8% மாணவர்கள் நண்பர்களின் வீடுகளிலும் 3.8% மாணவர்கள் பொது இடங்களிலும் (உதாரணமாக இணையக் கூடங்கள், நூலகங்கள் போன்றவை) சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். இது, சில

மாணவர்களுக்கு தனிப்பட்ட இணைய வசதி இல்லாமல், பகிர்ந்து பயன்படுத்தும் சூழலில் சமூக வலைத்தளங்களை அணுகும் நிலை இருப்பதைக் காட்டுகிறது. பாடசாலைகளில் (0%) சமூக வலைத்தளப் பாவனை காணப்படவில்லை. இது, பாடசாலை நிர்வாகம் கல்விசார் கவனத்தை முன்னிலைப்படுத்தி சமூக வலைத்தளப் பாவனையை வரையறுக்கும் அல்லது தடைசெய்யும் கொள்கைகள் உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

***சமூக வலைத்தளப் பாவனைக்காகப் பயன்படுத்தும் சாதனம்***

இப்பகுதி, மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கு எந்த வகையான மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதைக் காட்டுகிறது.

***சமூக வலைத்தளப் பாவனைக்காகப் பயன்படுத்தும் சாதனம்***

**அட்டவணை 10**

*சமூக வலைத்தளப் பாவனைக்காகப் பயன்படுத்தும் சாதனம்*

| சாதனம் | மாணவர் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| Smart Phone | 118 | 89.4% |
| Laptop | 12 | 09.1% |
| Laptop / Desktop | 02 | 01.5% |
| ஒன்றுக்கு மேற்பட்டவை | 00 | 00.0% |
| மொத்தம் | 132 | 100% |

***பெற்றோரின் கருத்தில், சமூக வலைத்தளப் பாவனைக்காகப் பயன்படுத்தும் சாதனம்***

**அட்டவணை 11**

*பெற்றோரின் கருத்தில், மாணவர் சமூக வலைத்தளப் பாவனைக்காகப் பயன்படுத்தும் சாதனம்*

| சாதனம் | பெற்றோர் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| திறன்பேசி | 16 | 80.0% |
| Tablet | 03 | 15.0% |
| கணினி | 01 | 05.0% |
| மொத்தம் | 20 | 100% |

அட்டவணை 10 இன் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 89.4% மாணவர்கள் திறன்பேசி மூலம் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகின்றனர். இது, சமூகவலைத்தளப் பாவனையில் திறன்பேசிகள் அணுகல் வசதியையும் உடனடித்தன்மையையும் வழங்குகின்றன என்பதைக் காட்டுகிறது. 9.1% மாணவர்கள் மடிக்கணினியையும், 1.5% மாணவர்கள் மடிக்கணினி மற்றும் கணினி இரண்டையும் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். எனினும், ஒன்றுக்கு மேற்பட்ட சாதனங்கள் பயன்படுத்துவதாகக் கூறியோர் எவரும் இல்லை. இது, பெரும்பாலான மாணவர்கள்

சமூக வலைத்தளப் பாவனைக்கு ஒரே சாதனத்தை அதாவது, திறன்பேசியைச் சார்ந்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது.

பெற்றோர்களின் கருத்தும் இதே போக்கை உறுதிப்படுத்துகிறது. அவர்களில் 80% பெற்றோர் தங்கள் பிள்ளைகள் திறன்பேசி மூலம் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர், மேலும் சிலர் Tablet (15%) அல்லது கணினி (5%) பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளனர். இது, சமூக வலைத்தளப் பாவனையில் திறன்பேசிகள் முக்கிய நுழைவாயிலாக மாறிவிட்டதை உறுதிப்படுத்துகிறது.

**அட்டவணை 12**

*சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கு பெற்றோரின் அனுமதி*

| பெற்றோரின் அனுமதி | மாணவர் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| உண்டு | 102 | 77.3% |
| இல்லை | 21 | 15.9% |
| பெற்றோருக்குத் தெரியாது | 09 | 06.8% |
| மொத்தம் | 132 | 100% |

***சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான பெற்றோரின் வரையறை***

**அட்டவணை 13**

*சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான பெற்றோரின் வரையறை*

| வரையறை | பெற்றோர் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| வரையறையைக் கடைப்பிடிக்கிறார் | 03 | 15.0% |
| வரையறையைக் கடைப்பிடிக்கவில்லை | 17 | 85.0% |

இப்பகுதி, மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதற்கான பெற்றோரின் அனுமதி, விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நிலை பற்றிய தகவல்களை வெளிப்படுத்துகிறது. பெற்றோரின் அனுமதியானது, மாணவர்களின் சமூக வலைத்தளப் பாவனை பாதுகாப்பாக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முக்கியமான கூறாகும். அட்டவணை 13 இன்படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 77.3% மாணவர்கள் பெற்றோரின் அனுமதியுடன் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். இது, பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் சமூக வலைத்தளப் பாவனை குறித்து அறிந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால், 15.9% மாணவர்கள் பெற்றோரின் அனுமதியின்றியும், மேலும் 6.8% மாணவர்கள் பெற்றோருக்குத் தெரியாமலும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது, சில மாணவர்கள் சமூக வலைத்தளங்களை மறைமுகமாக அல்லது சுயமாகக் கையாளுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

பெற்றோர்களின் கருத்துப்படி, பெரும்பாலானோர் (85%) தங்கள் பிள்ளைகள் சமூக வலைத்தளப் பாவனையில் தங்களால் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளைப் பின்பற்றவில்லை எனக் கூறியுள்ளனர். ஆனால், மிகச்சிறிய எண்ணிக்கையான (15%)

பெற்றோர்கள் மட்டுமே தங்கள் பிள்ளைகள் வரையறைகளைப் பின்பற்றுகிறார்கள் என நம்புகின்றனர். இதனால், பெற்றோர்களின் அனுமதி இருந்தாலும், நடைமுறையில் மாணவர்கள் அந்த அனுமதியின் கட்டுப்பாட்டு வரையறைகளை மீறுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இது, பெற்றோரின் எதிர்பார்ப்புக்கும், மாணவர்களின் நடைமுறைக்கும் இடையேயான இடைவெளியைச் சுட்டிக் காட்டுகிறது.

***சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கம்***

**அட்டவணை 14**

*சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கம்*

| நோக்கம் | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| நண்பர்களுடன் கதைப்பதற்கு | 109 | 82.6% |
| பொழுதுபோக்கிற்கு (சினிமா, இசை, நகைச்சுவை) | 102 | 77.3% |
| செய்திகளை வாசித்து அறிவதற்கு | 21 | 15.9% |
| புதிய தகவல்களை அறிந்துகொள்வதற்கு | 33 | 25.0% |
| கல்வி நோக்கங்களுக்கு (பாடங்களைக் கற்க, சந்தேகங்களைத் தீர்க்க) | 39 | 29.5% |
| விளையாடுவதற்கு | 20 | 15.2% |

அட்டவணை 14 இன் படி, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 132 மாணவர்களில் பெரும்பாலானோர் கல்வி நோக்கங்களை விட நண்பர்களுடன் கதைப்பதற்கும் பொழுதுபோக்கிற்கும் சமூக வலைத்தளங்களை அதிகமாகப் பயன்படுத்துவதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

***சமூக வலைத்தளமும் சிந்தனைத் திறனும்***

**அட்டவணை 15**

*சமூக வலைத்தளமும் சிந்தனைத் திறனும்*

| சமூக வலைத்தளம் சிந்தனையைத் தூண்டுகின்றது | மாணவர் எண்ணிக்கை ($n$) | சதவீதம் (%) |
|---|---|---|
| பெரும்பாலும் தூண்டுகின்றன | 03 | 02.3% |
| சிலவேளைகளில் | 26 | 19.7% |
| ஒருபோதும் இல்லை | 103 | 78.0% |

அட்டவணை 15 இன் படி, பெரும்பாலான மாணவர்கள் (78%) சமூக வலைத்தளங்கள் தங்களது சிந்தனையை ஒருபோதும் தூண்டுவதில்லை எனக் கூறியுள்ளனர். இது, சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் சிந்தனை அல்லது கிரகித்தல் திறனை வளர்க்கும் கருவியாக இல்லாமல், பெரும்பாலும் பொழுதுபோக்கு

மற்றும் தொடர்பு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது.

அட்டவணை 16 இன் தரவுகள் மாணவர்களின் பெரும்பாலானோர் சமூக வலைத்தளப் பாவனையால் கற்றல் நேரத்தில் கவனச் சிதறலுக்கு உள்ளாகின்றனர் என்பதைக் காட்டுகின்றன. முதல் வினாவில், 93 மாணவர்கள் (70.5%) ‘‘முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்’’ எனவும், 13 மாணவர்கள் (9.8%) ‘‘ஏற்றுக்கொள்கிறேன்’’ எனவும் பதிலளித்துள்ளனர். இதனால், சமூக வலைத்தளங்களில் உள்ள குறுகிய காணொளிகள் மாணவர்களின் ஆழமான சிந்தனை திறனைத் தடுக்கின்றன எனக் கூறலாம். இரண்டாவது வினாவில், 96 மாணவர்கள் (72.7%) ‘‘முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்’’ எனக் குறிப்பிட்டுள்ளனர். இது சமூக வலைத்தளப் பாவனைக்குப் பின்னர், மனச்சோர்வு மற்றும் கவனச் சிதறல் ஏற்படுவதால், மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்துவதில் சிரமப்படுகிறார்கள் என்பதை விளக்குகிறது. மூன்றாவது வினாவில், 80 மாணவர்கள் (60.6%) வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போதும் கூட கவனம் சிதறுகிறது எனத் தெரிவித்துள்ளனர். இது சமூக வலைத்தளப் பழக்கம் மாணவர்களின் கற்றல் சூழ்நிலை ஒழுங்கைப் பாதிக்கிறது என்பதைக் குறிக்கிறது. நான்காவது வினாவில், 73 மாணவர்கள் (55.3%) ஒரு விடயத்தில் நீண்ட நேரம் கவனம் செலுத்த முடியவில்லை எனப் பதிலளித்துள்ளனர். இதன் மூலம் சமூக வலைத்தளங்கள் வழங்கும் வேகமான தகவல்களின் தன்மை, மாணவர்களின் நீடித்த கவனத்திறனைக் குறைக்கின்றன என்பது தெளிவாகிறது.

***சமூக வலைத்தளப் பாவனையும் கற்றலில் கவனச் சிதறலும்***

**அட்டவணை 16**

*சமூக வலைத்தளப் பாவனையும் கற்றலில் கவனச் சிதறலும்*

| வினா இல. | வினா | முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன் | ஏற்றுக்கொள்கிறேன் | கூற முடியாது | நிராகரிக்கிறேன் | முற்றாக நிராகரிக்கிறேன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சமூக வலைத்தளங்களில் உள்ள குறுகிய காணொளிகள் எனது கவனத்தைச் சிதறடித்து, ஆழமான கற்றலைத் தடுக்கின்றன. | 93 | 13 | 13 | 06 | 07 |
| 2. | சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திய பிறகு, படிப்பில் கவனம் செலுத்துவது கடினமாக உள்ளது. | 96 | 16 | 08 | 09 | 03 |
| 3. | சமூக வலைத்தளப் பாவனையால் வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கும்போது எனது கவனம் சிதறுகின்றது. | 80 | 30 | 07 | 09 | 06 |
| 4. | சமூக வலைத்தளப் பாவனையால், ஒரு விடயத்தில் நீண்ட நேரம் என்னால் கவனம் செலுத்த இயலவில்லை. | 73 | 35 | 10 | 06 | 08 |

***சமூக வலைத்தளப் பாவனையும் உடற்சோர்வும்***

**அட்டவணை 17**

*சமூக வலைத்தளப் பாவனையும் உடற்சோர்வும்*

| வினா இல. | வினா | முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன் | ஏற்றுக்கொள்கிறேன் | கூற முடியாது | நிராகரிக்கிறேன் | முற்றாக நிராகரிக்கிறேன் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சமூக வலைத்தளப் பாவனை காரணமாக நான் போதுமான அளவு உறங்குவதில்லை. | 75 | 39 | 05 | 09 | 04 |
| 2. | சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவிடுவதால், எனக்கு மனச்சோர்வு அதிகரிக்கிறது. | 72 | 37 | 10 | 07 | 06 |

அட்டவணை 17 இன்படி, பெரும்பாலான மாணவர்கள் சமூக வலைத்தளப் பாவனையால் உடல் சோர்வு மற்றும் மன அழுத்தம் அனுபவிக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. முதல் வினாவில், 75 மாணவர்கள் (56.8%) ‘‘முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்’’ என்றும், 39 மாணவர்கள் (29.5%) ‘‘ஏற்றுக்கொள்கிறேன்’’ என்றும் பதிலளித்துள்ளனர். இதிலிருந்து, சமூக வலைத்தளப் பாவனையால் மாணவர்கள் போதுமான அளவில் உறங்குவதில்லை என்பதை அறியலாம். இரண்டாவது வினாவில், 72 மாணவர்கள் (54.5%) ‘‘முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்’’ என்றும், 37 மாணவர்கள் (28%) ‘‘ஏற்றுக்கொள்கிறேன்’’ என்றும் பதிலளித்துள்ளனர். இது சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவிடுவதால் மாணவர்களில் மனச்சோர்வு, மன அழுத்தம் மற்றும் கவலை உணர்வுகள் அதிகரிக்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது.

***பெற்றோரின் பார்வையில் மாணவரின் கற்றல் செயற்பாடு***

**அட்டவணை 18**

*பெற்றோரின் பார்வையில் மாணவரின் கற்றல் செயற்பாடு*

| கற்றலில் சமூக வலைத்தளப் பாதிப்பு | பெற்றோர் எண்ணிக்கை (*n*) | சதவீதம் (%) |
|---|---|---|
| கவனச் சிதறல் | 18 | 90% |
| கற்றல் செயற்பாட்டில் மாற்றம் | 19 | 95% |
| கற்றல் ஆர்வத்தில் மாற்றம் | 19 | 95% |
| உறங்கும் நேரத்தில் மாற்றம் | 10 | 50% |
| உடல் சுறுசுறுப்பில் மாற்றம் | 14 | 70% |

அட்டவணை 18 இல் காட்டப்பட்டுள்ளபடி, 20 பெற்றோர்களில் பெரும்பாலானோர் சமூக வலைத்தளப் பாவனையால் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டிலும் ஒழுங்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனக் கூறியுள்ளனர். 19 பெற்றோர் (95%) தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டில் மாற்றம்

ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர். இது சமூக வலைத்தளப் பாவனை கல்வி ஈடுபாட்டை குறைக்கும் ஒரு முக்கிய காரணமாக இருப்பதை வெளிப்படுத்துகிறது. 18 பெற்றோர் (90%) தங்கள் பிள்ளைகள் கவனச் சிதறலால் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம், சமூக வலைத்தளங்கள் மாணவர்களின் கவனத்தை திசை திருப்பி, கற்றல் நேரத்தில் மனச்சிதறலை ஏற்படுத்துகின்றன என்பதைக் காணலாம். 19 பெற்றோர் (95%) கற்றல் ஆர்வத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது சமூகவலைத்தளங்களில் அதிக ஈடுபாடு மாணவர்களின் கல்விசார் ஊக்கத்தை குறைக்கின்றது என்பதை சுட்டிக்காட்டுகிறது. மேலும், 10 பெற்றோர் (50%) மாணவர்களின் உறக்க நேரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், 14 பெற்றோர் (70%) உடல் சுறுசுறுப்பு குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இதன் மூலம், சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் உடல் நலத்திலும் மனநலத்திலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதை உணர முடிகிறது.

***மாணவர்களின் தவணைப் பரீட்சைப் புள்ளிகள்***

**அட்டவணை 19**

*மாணவர்களின் தவணைப் பரீட்சைப் புள்ளிகள்*

| மொத்தப் புள்ளிகள் | முதலாந் தவணை (*X*) | இரண்டாந் தவணை (*Y*) |
|---|---|---|
| 00-100 | 01 | 06 |
| 101-200 | 03 | 23 |
| 201-300 | 02 | 40 |
| 301-400 | 11 | 29 |
| 401-500 | 79 | 26 |
| 501-600 | 16 | 05 |
| 601-700 | 13 | 02 |
| 701-800 | 06 | 01 |
| 801-900 | 01 | 00 |
| மொத்தம் | 132 | 132 |

இப்பகுதி, மாணவர்களின் முதலாந் தவணை மற்றும் இரண்டாந் தவணை பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்கிறது. இது, சமூக வலைத்தளப் பாவனையின் அதிகரிப்பானது, மாணவர்களின் கல்விசார் முன்னேற்றத்தில் ஏற்படுத்திய தாக்கத்தைக் கண்காணிக்க உதவுகிறது.

**உரு 1**

*மாணவர்களின் தவணைப் பரீட்சைப் புள்ளிகள்*



இணைவுக் குணகம் $(r) = \frac{N\Sigma XY-(\Sigma X)(\Sigma Y)}{\sqrt{[N\Sigma X^2-(\Sigma X)^2][N\Sigma Y^2-(\Sigma Y)^2]}}$

$X =$ முதலாந்தவணைப் புள்ளிகள்

$Y =$ இரண்டாந்தவணைப் புள்ளிகள்

$N =$ மொத்த வகுப்புகள் (09)

இதனடிப்படையில் பியர்சனின் இணைவுக் குணகம் $(r) = .24$ ஆகும்.

மாணவர்களின் இரு தவணைப் பெறுபேறுகள் தொடர்பான புள்ளிவிவரப் பகுப்பாய்வில், மாணவர்களின் இரு தவணைப் பெறுபேறுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யும்போது, அவர்களின் தேர்ச்சி மட்டத்தில் ஒரு பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது. முதலாந் தவணையைச் சாரா மாறியாகவும் $(x)$, இரண்டாந் தவணையைச் சார்ந்த மாறியாகவும் $(y)$ கொண்டு பியர்சனின் இணைவுக் குணகம் $(r)$ கணக்கிடப்பட்டபோது, அதன் பெறுமானம் .24 ஆகக் காணப்பட்டது. இது இரு தவணைகளுக்கும் இடையே மிகக் குறைந்த அளவிலான நேர்க்கணியத் தொடர்பே இருப்பதைக் காட்டுகிறது. அதாவது, முதலாந் தவணையில் சிறப்பாகச் செயற்பட்ட மாணவர்கள் இரண்டாந் தவணையில் அதே நிலையைத் தக்கவைக்கத் தவறியுள்ளனர். மாணவர் எண்ணிக்கை செறிந்து காணப்படும் ஆகார வகுப்பானது முதலாந் தவணையில் 401 - 500 (76 மாணவர்கள்) என்ற உயர் மட்டத்தில் இருந்து, இரண்டாந் தவணையில் 201 - 300 (40 மாணவர்கள்) என்ற கீழ் மட்டத்திற்கு நகர்ந்துள்ளது. தேர்ச்சி மட்டத்தை உற்றுநோக்குகையில், முதலாந் தவணையில் 400 புள்ளிகளுக்கு மேல் 110 மாணவர்கள் இருந்த போதிலும், இரண்டாந் தவணையில் அவ்வெண்ணிக்கை 33 ஆகக் குறைந்துள்ளது. மாறாக, 101 - 300 என்ற குறைந்த புள்ளி வீச்சில் முதலாந் தவணையில் ஐந்து மாணவர்கள் மட்டுமே இருந்த நிலையில், இரண்டாந் தவணையில் அவ்வெண்ணிக்கை 62 ஆக அதிகரித்துள்ளது. ஒட்டுமொத்தமாக, இணைவுக் குணகம் 1.0 ஐ நோக்கி அமையாமல் 0.24 இல் நிற்பது, இரு தவணைகளுக்கும் இடையிலான பெறுபேறுகளில் உள்ள பாரிய இடைவெளியையும் மாணவர்களின் கற்றல் பின்னடைவையும் உறுதிப்படுத்துகிறது. இது சமூக வலைத்தளப் பாவனை அதிகரித்தமையைச் சுட்டிக்காட்டலாம்.

## ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும்

### *ஆய்வு முடிவுகள்*

தரவுப் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் பெறப்பட்ட முக்கியமான முடிவுகளை, முன்னர் பரிசீலிக்கப்பட்ட இலக்கிய மீளாய்வுகளுடன் ஒப்பிட்டு விளக்குகிறது. இதன் மூலம் சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் கற்றலுக்கு ஏற்படுத்தும் தாக்கங்கள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஆய்வுகளின் முடிவுகளோடு எவ்வாறு ஒத்துப்போகின்றன என்பதும் தெளிவாகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையின் பரவல் அளவு*

இவ்வாய்வில் பெரும்பாலான மாணவர்கள் தினசரி சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். அதில் YouTube, WhatsApp, Instagram, TikTok போன்ற தளங்கள் முன்னிலை பெற்றுள்ளன. இது தினேஷ் (2022) என்பவரின் ஆய்வுடன் இணங்குகிறது. அவர்கள் கூறுவதாவது, இன்றைய சூழ்நிலையில் பலர் கைபேசியில் முகநூலிலும் (Facebook), புலனம் (WhatsApp), வலையொளி (Youtube), படவரி (Instragram), பற்றியம் (Messanger) என்று இன்னும் பல வலைத்தளப் பதிவுகளில் முனைப்போடு அதிக நேரங்களைச் செலவிடுவதால் அன்றாட கடமைகளை மறந்து, வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையிலிருந்து விலகிச் சென்றுவிடுகின்றனர்.

### *சமூக வலைத்தளப் பாவனையின் நோக்கம்*

மாணவர்கள் சமூக வலைத்தளங்களை பெரும்பாலும் நண்பர்களுடன் தொடர்பு கொள்வது, பொழுதுபோக்கு, புதிய தகவல்கள் அறிதல் போன்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர். கல்வி சார்ந்த நோக்கத்திற்காக பயன்படுத்துவோர் குறைவாக இருந்தனர். இது Yeboah & Ewur (2018) ஆகியோரின் கருத்துகளோடு ஒத்துப்போகிறது. அவர்களின் ஆய்வுகளின்படி, சமூக வலைத்தளங்கள் கற்றல் வளங்களை வழங்கும் வாய்ப்பு இருப்பினும், அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தும் எண்ணிக்கையைக் காட்டிலும் பொழுதுபோக்கிற்கான பயன்பாடுகள் அதிகம் காணப்படுவதால், நேர ஒதுக்கீடு மாணவர்களின் கற்றலுக்கு ஆதாரமல்லாமல் எதிராக மாறுகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையில் மாணவர்கள்*

அதிகமான மாணவர்கள் 13 - 15 வயதுப் பிரிவில் சமூக வலைத்தளத்தைப் பாவிக்கத் தொடங்கியுள்ளனர் எனக் கூறியுள்ளனர். இது டயசியா (2017) என்பவரின் ஆய்வுடன் தொடர்புடையது. அவர் தமது ஆய்வில், இன்று சமூக வலைத்தளங்களின் பாவனையானது வளர்ந்தவர்களால் மட்டுமன்றி சிறுவர்கள் என மதிக்கப்படும் 18 வயதிற்கு குறைந்த பாடசாலை மாணவர்களால் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படுவது வருத்தத்திற்குரிய விடயமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

### *சமூக வலைத்தளப் பாவனையும் கற்றல் நேர ஒதுக்கீடும்*

ஆய்வின் மூலம் பெரும்பாலான மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவழிப்பதால், கற்றலுக்கான நேர ஒதுக்கீடு குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. குறிப்பாக, பெரும்பாலானோர் கற்றலுக்கான நேரம் ‘‘பாதிக்கப்படுகின்றது’’ அல்லது ‘‘ஓரளவிற்குப் பாதிக்கப்படுகின்றது’’ எனக் கூறியிருப்பது இதை உறுதிப்படுத்துகின்றது. இது Kumar & Singh (2020), Alhassan (2020), மற்றும் Jayawardana & Gamage (2024) ஆகியோரின் ஆய்வுகளுடன் ஒத்துப்போகிறது. இவ்வாய்வாளர்கள் சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவழிப்பது மாணவர்களின் நேர முகாமைத்துவத்திறனை பாதித்து, கல்வி கற்பதற்கான ஒதுக்கீட்டை குறைப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இவ்வாய்வில் மாணவர்கள் சமூக வலைத்தளப் பாவனையால் கற்றல் நேரத்தின் தரம் குறைகிறது என பெரும்பாலும் ஏற்றுக்கொண்டனர். இது Kumarasinghe (2016) குறிப்பிட்ட ‘‘நேர முகாமைத்துவ திறன்களில் குறைபாடு’’ என்ற முடிவுடன் நேரடி ஒப்பீட்டில் உள்ளது.

***சமூக வலைத்தளப் பாவனையும் கவனச் சிதறலும்***

பகுதி 4.11 இல், சமூக வலைத்தளங்களில் உள்ள குறுகிய காணொளிகள், அடிக்கடி வரும் அறிவிப்புகள் போன்றவை மாணவர்களின் கவனத்தைச் சிதறடிக்கின்றன என்ற முடிவு கிடைத்தது. இது Silva மற்றும் Amaratunga (2021) மற்றும் Gunawardhana மற்றும் Herath (2022) ஆகியோரின் ஆய்வுகளுடன் ஒத்துப்போகின்றது. அவர்கள் கட்டுப்பாடற்ற சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் கவனத்தைத் திசைதிருப்புவதாகக் கூறியுள்ளனர். மேலும், Olawole et al. (2025) கூறியபடி சமூக ஊடக அதிக பயன்பாடு கவன ஒருமுகத்தன்மையைக் குறைப்பதையும் இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது.

***சமூக வலைத்தளப் பாவனையும் கற்றல் ஆர்வமும்***

பெரும்பாலான மாணவர்கள் சமூக வலைத்தளப் பாவனையால் பாடங்களின் மீதான ஆர்வம் குறைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இது Lakshman & Weerasinghe (2023) மற்றும் Adeyemi (2021) ஆகியோரின் ஆய்வுகளுடன் ஒத்திருக்கிறது. இவர்கள் அதிகப்படியான சமூக ஊடகப் பயன்பாடு கல்வி உந்துதலைக் குறைக்கும் என்று வலியுறுத்தியுள்ளனர். அதே சமயம், சில மாணவர்கள் கல்விசார் தகவல்களைப் பெறுவதற்கு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது பயனுள்ளதாகக் கூறியுள்ளனர், இது Fidan மற்றும் Debbag (2018) கூறிய முடிவுடன் தொடர்புடையது.

***சமூக வலைத்தள அடிமைத்தனமும் கற்றல் வீழ்ச்சியும்***

இவ்வாய்வில் மாணவர்களின் பெரும்பாலானோர் சமூக வலைத்தளங்களில் அடிக்கடி ஈடுபடுவது அவர்களின் பரீட்சைப் புள்ளிகளைக் குறைப்பதாகக் கூறினர். இது Samarasinghe & Dissanayake, (2020) மற்றும் Shahnawaz & Rehman (2021) ஆகியோரின் ஆய்வுகளுடன் ஒத்துப்போகிறது. அவர்கள் சமூக ஊடக அடிமைத்தனம் கல்விச் சாதனையை எதிராகப் பாதிக்கிறது எனக் கூறினர்.

***சமூக வலைத்தளப் பாவனையும் கல்விச் சாதனையும்***

தரவு பகுப்பாய்வின்படி, சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவிடும் மாணவர்களின் இரண்டாம் தவணைப் பரீட்சை புள்ளிகள் மிகவும் குறைந்திருந்தன.

***சமூக வலைத்தளப் பாவனையும் உடல், உளச் சோர்வும்***

பெரும்பாலான மாணவர்கள் சமூக வலைத்தளப் பாவனையால் போதுமான உறக்கம் இல்லாமையும், மனச்சோர்வும் ஏற்படுவதாகக் கூறினர். இது Vithanage & Nawarathna (2023) மற்றும் Jiang et al. (2025) ஆகியோரின் ஆய்வுகளுடன் ஒத்துப்போகின்றது. இரண்டிலும் சமூகவலைத்தளப் பாவனை உளநலத்தையும் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

***சமூக வலைத்தளமும் மன அழுத்தமும்***

மாணவர்களின் மனநிலை மீதான தாக்கத்தைப் பற்றிய விளைவுகள் Orben et al. (2019) இன் முடிவுகளுடன் ஒத்திருக்கின்றன. இவ்வாய்வும் சமூக வலைத்தளப்

பாவனையினால் மன அழுத்தம், தூக்கமின்மை மற்றும் கவலை அதிகரிப்பதாகக் காட்டுகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையும் கற்றல் நேரத்தின் தரமும்*

அண்மைக் காலத்தில் மாணவர்கள் சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவழிப்பதால் கற்றல் நேரத்தின் தரம் குறைவதாக இவ்வாய்வு காட்டுகிறது. இதே கருத்தை Nasrullah & Khan (2022) மற்றும் Statista (2023) ஆய்வுகளும் முன்வைத்துள்ளன. இரண்டிலும் தினசரி மூன்றுக்கும் மேற்பட்ட மணிநேரம் சமூக ஊடகங்களில் செலவிடும் மாணவர்கள் குறைந்த கல்வி சாதனைக்குள்ளாகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

### *பெற்றோர் பார்வையில் சமூக வலைத்தளப் பாவனை*

பெற்றோர் அளித்த தரவுகளின் அடிப்படையில், சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் கவனம், உறக்கம் மற்றும் உடல் சுறுசுறுப்பு ஆகியவற்றில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளது. இதுவும் Wickramanayake (2022) மற்றும் Kumari & Silva (2019) ஆகியோரின் ஆய்வுகளுடன் இணங்குகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையும் கற்றல் ஊக்கமும் (Learning Motivation)*

இவ்வாய்வில், சமூக வலைத்தளங்களில் அதிக நேரம் செலவழிக்கும் மாணவர்களில் கல்வி நோக்கத்திற்கான ஊக்கம் குறைவாகக் காணப்பட்டது. பெரும்பாலானோர் ‘‘சமூக வலைத்தளங்கள் எனது கற்றல் ஆர்வத்தை அதிகரிக்கவில்லை’’ எனக் கூறினர். இது Perera & Weerasinghe (2022) மற்றும் Alahakoon & Weerasinghe (2020) ஆகியோரின் கருத்துகளுடன் ஒத்ததாகும். அவர்கள், சமூக வலைத்தளங்களில் உடனடி மகிழ்ச்சி, புகழ்பெறுதல் போன்ற மனநிலைக் காரணிகளால் மாணவர்கள் கல்விசார் நீண்டகால இலக்குகளிலிருந்து விலகுகின்றனர் எனக் கூறுகின்றனர். மாறாக, கல்வி நோக்கில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திய மாணவர்கள், தங்கள் கற்றலுக்கான உற்சாகத்தையும் புதிய ஆர்வத்தையும் பெற்றிருந்தனர். இதனால், சமூக வலைத்தளங்கள் ‘‘மனநிலை சார்ந்த கற்றல் ஊக்கி’’ (Psychological Motivator) ஆகவும் ‘‘கவனச் சிதறலுக்கான மூலமாகவும்’’ செயல்படுகின்றன என்ற இருமுனை நிலை வெளிப்படுகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையும் சுய கற்றலும் (Self-regulated Learning)*

மாணவர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும்போது, தங்களது கற்றல் நடவடிக்கைகளை தாங்களே திட்டமிடும் திறன் குறைகிறது எனத் தெளிவாகக் காணப்பட்டது. இது Kumarasinghe (2016) மற்றும் Silva & Rajapakse (2020) ஆகியோரின் ஆய்வுகளுடன் பொருந்துகிறது. அவர்கள், ‘‘அதிக சமூக வலைத்தள ஈடுபாடு சுயகற்றல்த்திறன்களைச் சிதைக்கின்றது’’ எனக் கூறுகின்றனர். இவ்வாய்வில் சில மாணவர்கள், தாங்கள் சமூக வலைத்தளங்களிலிருந்து கல்விசார் வளங்கள் (உதாரணமாக: YouTube பாடக் காணொளிகள், Wikipedia குறிப்புகள், வினாடி வினா குழுக்கள்) பயன்படுத்துவதாகக் கூறியிருந்தாலும், பெரும்பாலானோர் அவற்றை

தொடர்ந்து பயன்படுத்தாமல், விளையாட்டுகள் அல்லது பொழுதுபோக்கு நோக்கங்களில் திசைதிருப்பப்படுகின்றனர். இதன் மூலம், சுயகற்றல்த்திறனுக்கும் நேர முகாமைத்துவத்திற்கும் இடையே நேரடி தொடர்பு இருப்பது வெளிப்படுகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையும் கல்வி ஒத்துழைப்பும்*

சமூகவலைத்தளங்கள் கல்வி ஒத்துழைப்புக்கான கருவியாகச் செயற்படலாம் என்ற முடிவு இவ்வாய்விலும் வெளிப்படுகிறது. சில மாணவர்கள் WhatsApp அல்லது Instragram குழுக்களின் மூலம் பாடம் சார்ந்த கேள்விகளைப் பகிர்ந்துகொள்வதாகக் கூறியுள்ளனர். இது Bano et al. (2019) மற்றும் Zhai & Li (2022) ஆகியோரின் கருத்துகளுடன் இணங்குகிறது. அவர்கள் சமூக வலைத்தளங்கள் ‘‘கூட்டுக் கற்றல்’’ மற்றும் ‘‘அறிவுப்பகிர்வு’’ நடவடிக்கைகளுக்கான பயனுள்ள இடமாக இருக்கலாம் எனக் கூறியுள்ளனர். ஆனால், கல்விசார் ஒத்துழைப்பை விட, பொழுதுபோக்கு தொடர்பான உரையாடல்கள் பெரும்பாலும் மாணவர்களின் நேரத்தைப் பறிக்கின்றன என்பதையும் இவ்வாய்வு காட்டுகிறது. இதன் மூலம் சமூக வலைத்தளப் பாவனைக்கான ‘‘பயன்பாட்டு நோக்கம்’’ கல்வி விளைவுகளை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருப்பது உறுதியாகிறது.

### *சமூக வலைத்தளப் பாவனையும் மனநிலை சமநிலையும் (Psychological Balance)*

ஆய்வின் பல்வேறு பகுதிகளில், சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களின் மனநிலை சமநிலையைப் பாதிக்கின்றது என்பது தெளிவாகக் காணப்படுகிறது. மாணவர்கள் தங்களது நண்பர்களின் பதிவுகளைப் பார்த்து தங்களை ஒப்பிடுதல், பிறரின் பாராட்டுகளுக்காக ‘‘போஸ்ட்’’ செய்வது போன்ற பழக்கங்கள், தன்னம்பிக்கை குறைவுக்கும் மனஅழுத்தத்திற்கும் வழிவகுக்கின்றன. இது Alimoradi et al. (2021) ஆகியோரின் ஆய்வுகளுடன் ஒத்ததாகும். அவர்கள் சமூகவலைத்தளப் பாவனையில் உருவம், புகழ், ஒப்பீடு போன்ற காரணிகள் மாணவர்களின் மனஆரோக்கியத்தை நேரடியாகப் பாதிக்கின்றன எனக் கூறினர்.

### *சமூக வலைத்தளப் பாவனை மற்றும் தகவலைப் பிரித்தறியும் திறனும் (Information Filtering Skill)*

இன்றைய மாணவர்கள் சமூகவலைத்தளங்களின் வழியாக பல்வேறு தகவல்களைப் பெறுகின்றனர். ஆனால் அவற்றில் உண்மையான கல்விசார் தகவலைத் தேர்வு செய்வதில் குறைபாடு காணப்படுகிறது. Abesekara மற்றும் Fernando (2019) ஆகியோரின் ஆய்வுடன் ஒத்துப்போகிறது. அவர்கள் சமூக வலைத்தளங்களில் அதிகப்படியான தகவல் இருப்பதால் மாணவர்கள் ‘‘அறிவியல் வடிகட்டும் திறனை (Cognitive Filtering)’’ இழக்கின்றனர் எனக் கூறினர். இவ்வாய்விலும் பெரும்பாலானோர் சமூக வலைத்தளங்களில் கல்விசார் தகவல்களைக் கண்டறிதல் சிரமமானதாக இருப்பதாகத் தெரிவித்தனர். இதனால், ‘‘அறிவு ஆழம் (Depth of Learning)’’ குறையும் அபாயம் உள்ளதாகக் கூறலாம்.

### *ஒருங்கிணைந்த முடிவு*

இவ்வாய்வின் மொத்த முடிவுகள், சமூகவலைத்தளப் பாவனையும் மாணவர்களின் கற்றல் செயற்பாடும் எதிரான (negative correlation) உறவை உடையவை என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. முன்னைய இலக்கிய மீளாய்வுகளில் பெரும்பான்மையும் இதையே உறுதிப்படுத்துகின்றன. நேர ஒழுங்கின்மை, கவனச்சிதறல், மனச்சோர்வு, குறைந்த கல்விச்சாதனை, மற்றும் உடற்சோர்வு போன்றவை சமூக வலைத்தளத்தின் அதிகபயன்பாட்டின் விளைவுகள் என கூறப்படுகின்றன. எனினும், சில ஆய்வுகள் கல்வி நோக்கில் சமூக வலைத்தளப் பாவனை கல்வி ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்றும், சரியான வழிகாட்டுதலுடன் பயன்படுத்தினால் கல்விக்கு உதவியாக மாறும் என்றும் கூறியுள்ளனர் (Al-Rahmi et al., 2018; Fidan & Debbag, 2018).

### *பரிந்துரைகள்*

#### *மாணவர்களுக்கான பரிந்துரைகள்*

மாணவர்கள் தங்களின் கைபேசிகளில் 'Screen Time' கட்டுப்பாடுகளை உருவாக்க வேண்டும். ஒரு நாளைக்கு 45 நிமிடங்களுக்கு மேல் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தாத வண்ணம் சுயகட்டுப்பாட்டை வளர்த்தல். கல்விசார் நோக்கங்களுக்காக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் உதாரணமாக YouTube கல்வி சேனல்கள், Google Classroom, Khan Academy, TED-Ed போன்றவை. சமூகவலைத்தளங்களில் கல்விசாரா, நேரத்தை வீணாக்கும் பக்கங்கள் அல்லது குழுக்களை தவிர்க்க வேண்டும். பொழுதுபோக்கு பக்கங்களை விடுத்து, Khan Academy, TED-Ed போன்ற கல்விசார் பக்கங்களைப் பின்தொடர வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தமது கல்வி இலக்கை நினைவில் கொண்டு, சமூக வலைத்தளப் பாவனையை நேரமுகாமைத்துவத்துடன் (time management) ஒருங்கிணைக்க வேண்டும். சமூக வலைத்தளங்களில் காணப்படும் தவறான அல்லது போலிச் செய்திகளை விமர்சனரீதியாக அணுகி, உண்மைத் தகவலை உறுதிசெய்யும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். இணையத்தில் எதைப் பகிர வேண்டும், எதைப் பார்க்க வேண்டும் என்ற தார்மீகப் பொறுப்புடன் செயல்படுதல் வேண்டும். சமூக வலைத்தளங்களில் கற்றல் குழுக்களை உருவாக்கி, நண்பர்களுடன் கல்வி சார்ந்த கருத்துகளைப் பகிர்வது ஊக்குவிக்கப்பட வேண்டும்.

#### *ஆசிரியர்களுக்கான பரிந்துரைகள்*

ஆசிரியர்கள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி மாணவர்களுடன் கல்விசார் தொடர்பு பேணும் வழிகளை உருவாக்க வேண்டும். (உதாரணமாக: WhatsApp குழுக்கள், Google Meet, Telegram Class Channels). கல்விசார் காணொளிகள், PowerPoint தொகுப்புகள் மற்றும் விளக்கக்காட்சிகளை சமூக வலைத்தளங்கள் வழியாக மாணவர்களுக்கு பகிர்ந்து கொள்ளலாம். சமூக வலைத்தளங்கள் மூலம் பாடத்திற்கான நிகழ்நிலை விவாதங்கள், வினாடிவினாக்கள், குழுக்கற்றல் நடவடிக்கைகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம். வாரத்தில் ஒரு பாடவேளையை “டிஜிட்டல் சுகாதாரம்” (Digital Hygiene) குறித்துப் பேச ஒதுக்கலாம்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சமூக வலைத்தள டிஜிட்டல் நெறிகள் (Digital Ethics) பற்றி வழிகாட்ட வேண்டும். மாணவர்களின் பாவனையைக் கண்காணித்து, கல்விசாரா திசைதிருப்பலைக் குறைக்கும் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

***பெற்றோர்களுக்கான பரிந்துரைகள்***

பெற்றோர் தமது பிள்ளைகள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் நேரத்தைக் கண்காணிக்க வேண்டும். தினசரி பாவனை நேரத்திற்கு வரையறைகள் மற்றும் விதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். உறங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே மின்னணு சாதனங்களை அணைத்து வைக்கும் பழக்கத்தை (Digital Fasting) நடைமுறைப்படுத்தல். பிள்ளைகள் பயன்படுத்தும் சமூகத் தளங்களை அறிந்து, இணையத்தில் என்ன செய்கிறார்கள் என்பதை அதிகாரப் போக்கின்றி, நட்புடன் கேட்டறிதல் வேண்டும். கல்விசார்ந்த காணொளிகள் மற்றும் பதிவுகள் குறித்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும். மனச்சோர்வு அல்லது உறக்கக் குறைபாடு போன்ற விளைவுகள் இருந்தால், அதை ஆரம்ப நிலையிலேயே கவனித்து ஆலோசனை வழங்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளின் முன்னிலையில் அதிக நேரம் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**உசாத்துணைகள்**


Abesekara, A., & Fernando, P. (2019). Impact of Social Media on Information Quality in Student Learning. *Journal of Educational Technology, 15(2),* 45-52.

Adeyemi, B. (2021). Impact of social media on academic performance of students. *International Journal of Educational Research, 9*(3), 45–54.

Alahakoon, C., & Weerasinghe, T. (2020). Impact of social networking sites on academic performance of undergraduates: A study at the University of Sri Jayewardenepura, Sri Lanka. *Journal of the University Librarians Association of Sri Lanka, 23(2),* 54–72. https://doi.org/10.4038/jula.v23i2.7924

Alhassan, A. (2020). Exploring the relationship between social media use and academic performance among university students. *Journal of Applied Research in Higher Education, 12*(5), 1235–1250. https://doi.org/10.1108/JARHE-05-2019-0105

Alimoradi, Z., Lin, C. Y., Broström, A., Bülow, P. H., Bajalan, Z., Griffiths, M. D., & Pakpour, A. H. (2021). Internet addiction and sleep problems: A systematic review and meta-analysis. *Sleep Medicine Reviews, 47,* 101–113. https://doi.org/10.1016/j.smrv.2019.101313

Al-Rahmi, W., Othman, M. S., & Yusuf, L. M. (2018). The role of social media for collaborative learning to improve academic performance of students. *Telematics and Informatics, 35*(1), 36–47. https://doi.org/10.1016/j.tele.2017.09.006

Amin, Z., Mansoor, A., & Hussain, S. R. (2016). Impact of social media on students' academic performance. *International Journal of Business and Management Invention,* *5*(4), 22–29. https://www.academia.edu/download/55381838/D05040 2022029.pdf

Bandura, A. (1977). *Social learning theory*. Prentice-Hall.

Bano, S., Shah, B., Zaman, F., & Alam, S. (2019). Social media and learning: The role of peer feedback and collaborative learning in student engagement. *Computers & Education, 143,* 103694. https://doi.org/10.1016/j.compedu. 2019.103694

Fernando, A., & Jayasuriya, P. (2022). Social media and academic performance: A study among urban school students in Colombo. *Asian Educational Review, 15(1),* 22-39.

Fidan, T., & Debbag, M. (2018). The usage of social media in education: A meta-analysis study. *Educational Sciences: Theory & Practice, 18*(1), 1–22. https://doi.org/10.12738/estp.2018.1.0216

Gunawardena, L., & Perera, M. (2019). Time spent on social media and its correlation with academic achievements of Sri Lankan secondary school students. *Journal of the National Institute of Education Sri Lanka*, *5*(1), 23-35.

Gunawardhana, N., & Herath, H. M. T. (2022). Social networking sites and academic performance of university students: Evidence from Sri Lanka. *Journal of Humanities and Social Sciences Studies, 4*(2), 1-12.

Jayawardana, M. A. S., & Gamage, S. H. (2024). The mediating effect of time management on the relationship between social media usage and academic performance of Sri Lankan undergraduates. *South Asian Journal of Marketing & Management Research, 14*(2), 1-12.

Jiang, Y., et al. (2025). Risky social media use and student outcomes. *Frontiers in Public Health, 13*, 1668541. https://doi.org/10.3389/fpubh. 2025.1668541

Katz, E., Blumler, J. G., & Gurevitch, M. (1973). "Uses and gratifications research." *Public Opinion Quarterly*, *37*(4), 509-523.

Keles, B., McCrae, N., & Grealish, A. (2020). A systematic review: The influence of social media on depression, anxiety and psychological distress in adolescents. *International Journal of Adolescence and Youth, 25(1),* 79-93. https://doi.org/10.1080/02673843.2019.1590851

Khan, S., Khan, R., & Amin, F. (2019). The impact of social media usage on student performance. *Journal of Education and Practice 10*(2), 109–115.

Kumarasinghe, N. (2016). *Social media and academic performance research.* Colombo: ABC Publishers.

Kumar, M., & Singh, R. (2020). *Journal of Education and Technology. 10(2),* 45-53.

Kumari, A., & Silva, P. (2019). The relationship between social media usage and psychological well-being among Sri Lankan adolescents. *Sri Lanka Journal of Child Health*, *48*(4), 312-317.

Lakshman, R., & Weerasinghe, T. D. (2023). The association between time spent on social media and academic grades: A study of Sri Lankan tertiary education students. *Asian Journal of Education and Social Studies, 43*(3), 1-9.

Mahmoudi, H., Ghasemi, M., & Amin Zadeh, S. (2025). Effects of social media on health and learning. *Journal of Sport and Leisure Time, 3*(1), 45–59.

Ministry of Education, Sri Lanka. (2023). *Annual report on student performance and learning progress in Colombo educational zones.* Colombo Ministry of Education.

Mohamed, S., et al. (2022). Impact of social media on student learning. *Journal of Educational Technology Systems, 51*(4), 537-554.

Munales, S., et al. (2020). The Ubiquitous Nature of Smartphones and Social Media Among Adolescents. *Journal of Youth Studies, 15(2),* 201-215.

Nasrullah, S., & Khan, M. S. (2022). Impact of social media on students' academic performance. *Journal of Education and Practice, 13(6),* 21–30.

Nweke, O., Ezepue, F., & Nduka, I. (2025). Social media usage and academic performance of undergraduates in Nigeria. *Pakistan Journal of Life and Social Sciences, 23*(1), 3989–3997. https://www.pjlss.edu.pk/pdf_files/2025_1/3989-3997.pdf

Nwosu, C., & Okafor, G. (2021). Social media usage and academic procrastination among university students. *Journal of Applied Research in Higher Education, 13*(3), 713–727. https://doi.org/10.1108/JARHE-04-2020-0090

Olawole, A. O., et al. (2025). Influence of social media use on cognitive and behavioural outcomes of undergraduates in Federal University, Oye-Ekiti, Nigeria. *University Journal of Educational Research and Social Sciences.* https://unilaws.org/ujervs/article/view/117

Orben, A., Dienlin, T., & Przybylski, A. K. (2019). Social Media's Impact on Sleep and Academic Performance. *Journal of Youth and Adolescence, 48(2),* 245-257.

Perera, K. K. I. U., & Senanayake, S. P. (2023). The mediating role of study habits in the relationship between social media usage and academic achievement of Sri Lankan university students. *Journal of Applied and Emerging Sciences, 13*(1), 1-9.

Perera, K., & Weerasinghe, I. (2022). The effect of social media usage on academic performance of university students in Sri Lanka. *International Journal of Education and Development using ICT, 18*(1), 120–135.

Perera, H. N., & Wijewardena, N. (2021). The impact of social media addiction on academic performance: A study on Sri Lankan university students. *International Journal of Scientific and Research Publications (IJSRP), 11*(1), 56-63. https://doi.org/10.29322/IJSRP.11.01.2021.p10936

Rajapakse, U., & Mendis, R. (2019). The negative impact of social media induced stress on cognitive performance relevant to academic learning in Sri Lankan adolescents. *Journal of Negative Impacts of Technology*, *2*(1), 5-15.

Rajapakse, U., & Mendis, R. (2020). Social media addiction and its effect on academic performance: A study of Sri Lankan undergraduates. *Ruhuna Journal of Management and Finance*, *6*(1), 30-42.

Samarasinghe, D., & Wijeratne, T. (2025). The negative mediating effect of stress on the relationship between social media addiction and academic achievement among Sri Lankan youth. *Journal of Addictive Behaviors Negative Outcomes*, *7*(1), 35-45.

Samarasinghe, R., & Dissanayake, S. (2020). A study on social media addiction and academic procrastination among Sri Lankan university students. *Journal of the University of Ruhuna, 8*(1), 55-68.

Sandanayake, R. M., & Perera, H. A. (2023). The impact of social media use for leisure on the academic achievement of Sri Lankan university students. *Peradeniya University Arts Faculty Journal*, *15*(1), 45-58.

Saqib, M., & Rehman, K. (2018). Impact of social media usage on academic performance of university students. *Arab World English Journal (AWEJ), 9*(3), 406–418. https://doi.org/10.24093/awej/vol9no3.27

Shahnawaz, M., & Rehman, A. (2021). Social media usage and academic distraction among university students in Pakistan. *Asian Journal of Education and Social Studies, 18*(3), 12–24.

Siemens, G. (2005). "Connectivism: A learning theory for the digital age." *International Journal of Instructional Technology and Distance Learning*, 2(1).

Silva, M., & Rajapakse, R. (2020). Data privacy and security concerns in the educational use of social media in Sri Lanka. *Moratuwa Engineering Research Conference Proceedings*, 56-61.

Silva, P. S., & Amaratunga, G. A. D. (2021). Impact of mobile phone usage on academic performance of university students in Sri Lanka. *International Journal of Advances in Engineering and Management (IJAEM), 3*(5), 480-485.

Statista. (2023). Average daily time spent on social media by students.

Sweller, J. (1988). "Cognitive load during problem solving: Effects on learning." *Cognitive Science*, 12(2), 257-285.

Vithanage, J., & Nawarathna, L. S. (2023). The relationship between excessive social media use and academic burnout among Sri Lankan university students. *International Journal of Social Sciences and Management Review, 4*(1), 1-8.

Wickramanayake, L. (2022). Social Media Use by Adolescent Students of Sri Lanka: Impact on Learning and Behavior. *Global Knowledge, Memory and Communication, 71(1/2),* 70-85.

Yeboah, J., & Ewur, G. D. (2018). The impact of WhatsApp messenger usage on students' performance in Tertiary Institutions in Ghana. *Journal of Education and Practice*, *9*(3), 47–53.

Zhai, X., & Li, M. (2022). The role of social media in collaborative learning: Evidence from higher education. *Educational Technology Research and Development, 70*(2), 459–478. https://doi.org/10.1007/s11423-021-10030-5

சாரா, ம. (2025). *அன்றாட வாழ்வில் சமூக ஊடகங்களின் பாதிப்பு - இதுக்கு யார் பொறுப்பு?* https://kalkionline.com/lifestyle/home-and-family/impact-of-social-media-on-our-lives-who-is-responsible

சுஜா. (2022). திறந்த ஊடகத் தளமும் பறந்த வாழ்வியல் தரமும். அருள்பணி இராஜசேகரன் (தொகுப்பு), *உலகை ஆளும் ஊடகம்* (பக். 193 – 202). நம் வாழ்வு வெளியீடு.

டயசியா, பு. (2017). *தற்காலத்தில் பாடசாலை மாணவர்களிடம் காணப்படும் சமூக ஊடகங்களின் பாவனையும் விளைவுகளும்.* கல்லடிப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு. ஏழாவது சர்வதேச ஆய்வு மாநாடு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

தினேஷ், ஜே. அ. ப. (2022). ஊடக உலகும் அது எதிர்கொள்ளும் சவால்களும். அருள்பணி இராஜசேகரன் (தொகுப்பு), *உலகை ஆளும் ஊடகம்* (பக். 170 – 182). நம் வாழ்வு வெளியீடு.